SENGUNTHAR

# Daily News

05-01-2026/SEC/DN/330




செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் நுவலி தமிழ் மன்றம் சார்பாக தமிழர் திருநாள் என்ற தலைப்பில், பௌர்ணமி கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது. இக்கவியரங்க நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் பெருமளவில் பங்கேற்று, தங்களின் கவிதை எழுதும் திறனை ஆர்வத்துடனும் திறம்படவும் வெளிப்படுத்தினர்.நிகழ்ச்சியில் மாணவர்கள் தமிழர்களின் பாரம்பரிய விழாக்களான பொங்கல், மாட்டுப்பொங்கல் உள்ளிட்ட விழாக்களின் சிறப்புகள், வரலாறு, கலாசாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை விளக்கும் வகையில் அழகிய கவிதைகளை இயற்றி வாசித்தனர். அவர்களது கவிதைகள் தமிழ் மரபின் பெருமையையும் பண்பாட்டுச் செழுமையையும் உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது.மேலும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மன்ற ஒருங்கிணைப்பாளர், தமிழர் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் பாரம்பரிய கலை விழாக்கள் மற்றும் பொங்கல் போன்ற விழாக்களின் தொன்மை மற்றும் சிறப்புகளை கவிதை நயத்துடன் எடுத்துரைத்தார். இதன் மூலம் மாணவர்களிடையே தமிழர் பாரம்பரியத்தின் மீது மிகுந்த ஆர்வம் ஏற்படுத்தப்பட்டது.இத்தகைய பண்பாட்டு விழாக்கள் மக்களை ஒன்றிணைத்து, மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழ வழிவகுக்கின்றன என்பதை மாணவர்கள் இந்த கவியரங்கத்தின் மூலம் நன்கு புரிந்து கொண்டனர்.

SENGUNTHAR

Daily News

05-01-2026/SEC/DN/330



## ECE Faculty Member Attends NCC Pre-Commission Training

Dr. M. Arunkumar, Assistant Professor in the Department of Electronics and Communication Engineering, is attending the Pre-Commission Training Course at the Officers Training Academy, Kamptee, Nagpur.The training is scheduled from January 5 to April 4, 2026.Nearly 600 Caretaker Officers from across the country are participating in the 90-day programme. The course aims to prepare officers for leadership roles in the National Cadet Corps. On successful completion of the training, Dr. Arunkumar will be commissioned with the rank of Lieutenant.

The Department of Pharmaceutical Technology successfully conducted the Program Assessment Committee (PAC) meeting. During the meeting, the committee reviewed and discussed the institute’s and department’s vision and mission, Course Outcomes (COs), Program Outcomes (POs), Program Educational Objectives (PEOs), and Program Specific Outcomes (PSOs). The UG curriculum and syllabus were evaluated, along with industry-supported laboratory experiments, polyglot classes, student performance analysis, and placement activities.



**SENGUNTHAR**

# Daily News

05-01-2026/SEC/DN/330

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



**குறள் 694:**

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.

**விளக்கம்:**

ஆற்றல் வாய்ந்த பெரியவர்கள் முன்னே, மற்றவர்கள் காதுக்குள் பேசுவதையும், அவர்களுடன் சேர்ந்து சிரிப்பதையும் தவிர்த்து, அடக்கமெனும் பண்பைக் காத்திடல் வேண்டும்

## இலக்கணக் குறிப்பறிதல்

**வேர்ச்சொல்லிலிருந்து புதிய சொற்கள்**

கால் என்னும் சொல்லிலிருந்து காற்றாடி, காற்று, காற்றாலை உருவாகின்றன.

சூர் என்னும் சொல்லிலிருந்து சூரியன், சூரன் உருவாகின்றன.

இதேபோன்று, ஒரு வினையடியிலிருந்து அதன் மற்ற வடிவங்களையும் உருவாக்கலாம்.

எடுத்துக்காட்டாக, கல் என்னும் வினையடியிலிருந்து கற்றான் – கற்க– கற்ற பெண் – கற்று மகிழ் – கற்றவனை – கற்பாய் – கற்றுக் கொண்டான் என உருவாக்கலாம்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: சமாச்சாரம் தமிழ்மொழி : செய்தி



SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS) TIRUCHENGODE-637205, NAMAKKAL (Dt), TAMILNADU